# பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ. எண். 10** **நாள். 06.12.2017**

**எண்.11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்–2017 முன்னிட்டு இந்திய தேர்தல் ஆணையம் தேர்தல் செலவினப் பார்வையாளர்களை நியமித்துள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

-----

இந்திய தேர்தல் ஆணையம் நடைபெறவுள்ள எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்–2017 முன்னிட்டு, இந்திய வருவாய் பணி அலுவலர்கள் நிலையில் மூன்று செலவினப் பார்வையாளர்களை நியமித்துள்ளது.

செலவினப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்ட திரு.குமார் பிரணவ், இ.வ.ப., (Thiru.Kumar Pranav,I.R.S.,) அவர்களை 9445036548 என்ற கைபேசி எண்ணிலும், திரு.பி.ஜி.கிருஷ்ணன், இ.வ.ப., (Thiru.B.G.Krishnan, I.R.S.,) அவர்களை 94450 36547 என்ற கைபேசி எண்ணிலும், திரு.ஷில் ஆஷீஸ், இ.வ.ப., (Thiru.Shil Asheesh, I.R.S.,) அவர்களை 94450 36530 என்ற கைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். செலவினப் பார்வையாளர்கள் 07.12.2017 முதல் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

ஏற்கனவே இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல் பொதுப்பார்வையாளர்களாக திரு.கம்லேஷ் குமார் பந்த், இ.ஆ.ப., (94450 71063) அவர்கள், செல்வி.அல்கா ஸ்ரீவஸ்தவா, இ.ஆ.ப., (94450 36541) அவர்கள், காவல் பார்வையாளர்களாக திரு.இம்மானுவேல் கே. முய்வா, இ.கா.ப., (94450 71061) அவர்கள், திரு.குர்ஷீத் அகமது, இ.கா.ப., (94450 36533) அவர்களும் நியமிக்கப்பட்டு தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேலும், தேர்தல் பொதுப்பார்வையாளர்களை பொதுமக்கள் நேரில் சந்தித்து தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்கவேண்டுமானால் ”சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை” அறை எண்.14–ல் **06.12.2017–ம் தேதி முதல் தினமும் காலை 9.30 மணியிலிருந்து காலை 10.30 மணி வரை** நேரில் தெரிவிக்கலாம். தேர்தல் தொடர்பான புகார்களை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகையில் உள்ள கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண் 044–25333021, 25333022 வாயிலாக தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**